## பண மதிப்பின்மைக்கு எதிராக

08.11.2016 அன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரை நிகழ்ட்திய பாரதப்பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள், இதற்கு மேல் 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என அரிவித்தார். கருப்பு பணத்தை தடுக்கவும், தீவிரவாதத்திற்கு உதவும் வகையில் உள்ள கள்ளப் பணத்தை ஒழிப்பதற்கும், வரி ஏய்ப்பை தடுக்கவும், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பழக்கத்தில் உள்ள நோட்டுக்களில் 86% திரும்பப் பெறப்படும். வெறும் 14% மட்டுமே பரிமாற்றத்திற்காக இருந்தது. ஆனால் அவற்றிற்கு பதிலாக அச்சடிக்கப்பட வேண்டிய நோட்டுக்கள் ஒரு சிரு அளவிலேயே அச்சடிக்கப்பட்டது. இது சாதாரண மக்களின் வாழ்க்கையை கடுமையாக பாதித்ததோடு, நாடு முழுவதிலும் ஒரு சூறாவளியை ஏற்படுத்தியது. இதனால் சாதாரன ஜனங்கள், குறிப்பாக தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

கருப்பு பணம் பணமாக இல்லாமல், தங்கமாக, சொத்தாக, பங்குகளாக உள்ள காரணத்தால் இந்த பணமதிப்பின்மை நடவடிக்கை காரணமாக கருப்புப் பணத்தின் மீது எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. நடத்தப்பட்ட பல ஆய்வு முடிவுகளின் படி மொத்தமுள்ள கருப்புப் பணத்தின் 3% மட்டுமே பணமாக உள்ளது என தெரிய வருகிறது.

வெளி நாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும், கருப்புப் பணத்தை எல்லாம் தோண்டி எடுத்து ஒவ்வொரு குடிமகனின் வங்கிக்கணக்கிலும், தலா ரூ.15 லட்சம் போடுவதாக 2014 நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது நரேந்திர மோடி அறிவித்தார். அவர் பாரத பிரதமராக பதவியேற்ற பின் ஸ்விஸ் வங்கி உள்ளிட்ட வெளி நாடுகளில் இருந்து கருப்புப் பணத்தை மீட்க எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அவருடைய நிர்வாக தோல்விகளை மறைக்கவும், 2017ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெருவதற்காகவே இந்த பண மதிப்பின்மை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்துப் பெற்ற பணத்தை எடுப்பதற்கு நீண்ட வரிசையில் நிற்க வேண்டி உள்ளதால், இந்த பண மதிப்பின்மை உழைக்கும் மக்கள் மத்தியில் ஒரு வேதனையை ஏற்படுத்தி உள்ளது. தங்கள் பணத்தை எடுக்க வரிசையில் நிற்கும்போது இதுவரை 105 பேர் தங்கள் உயிரை எழந்துள்ளனர். நாட்டின் பல பகுதிகளில் கோபமும் எதிர்ப்பும் எழுந்துள்ளது. இது ஒரு குறுகிய கால பிரச்சனை என்றும் ஊழலையும், கருப்புப் பணத்தையும் ஒழிப்பதற்கு மக்கள் இந்த துன்பங்களை தாங்கிக் கொள்ள வேண்டும் என பிரதமர் அறிவித்துள்ளார்.

என்கவுண்டரில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்தும், அரசியல் கட்சி தலைவர்களிடமிருந்தும்(பெரும்பாலும் பாஜகவினர்) பெரிய அளவில் புதிய 2000 ரூபாய்கள் பிடிபட்டுள்ளது என்பது தீவிரவாதிகளுக்கு உதவி செய்ய கள்ளப்பணம் உதவுகிறது என்கின்ற அரசின் வாதம் தவறானது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

செல்லாது என அறிவிக்கப்பட்ட 15.4 லட்சம் கோடி ருபாய் நோட்டுக்களில் 90% என்ற அளவிலான 14 லட்சம் கோடி ரூபாய் நோட்டுக்கள் ஏற்கனவே வங்கிகளுக்கு திரும்ப வந்துள்ளது. கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்கின்ற அரசின் வாதமும் தவறானது என இது நிரூபிக்கின்றது.

பண மதிப்பின்மை இந்திய பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் என பல பிரபல பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். உள்நாட்டு மொத்த உற்பத்தி குறையும் என்றும், அதிலிருந்து மீள்வதற்கு பல மாதங்கள் ஆகும் என அறிக்கைகள் பல தெரிவிக்கின்றன. பணப்பற்றாக்குறை காரணமாக ஊதியம் வழங்க இயலாத காரணத்தால், உற்பத்தி, விவசாயம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட பல துறைகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளனர்.

பணப்புழக்கம் இல்லாத காரணத்தால் BSNL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதுமின்றி அதிக

அளவிலான மதிப்புள்ள பணத்தை திரும்பப் பெற்றது என்பது உழைக்கும் மக்களுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கான சிரமங்களை கொடுத்துள்ளதால் இந்திய பொருளாதாரத்தில் மிகப்பெரிய சிக்கலை உண்டு பண்ணியுள்ளது. மக்களின் துன்பங்கள் அதிகரித்த காரணத்தால் அனைத்து பகுதி மக்களும் எதிர்க்க துவங்கி உள்ள சூழலில், மக்கள் பணமில்லா பரிமாற்றத்திற்கு நாடு மாற வேண்டும் என பிரதமர் கூறி வருகிறார். மொத்தமுள்ள மக்களில் மூன்றில் ஒரு பகுதி படிப்பறிவு இல்லாத, பெரும்பாலான கிராமங்களில் வங்கி கிளைகளோ ATMகளோ இல்லாத, இணையதளம் குறைந்த அளவிலேயே பயன்படுத்தபடும் இந்தியா போன்ற நாட்டில் பணமில்லா பரிவர்த்தனை என்பது பகல் கனவே. இது பெருமுதலாளிகளுக்கு, புதிய தலைமுறை வங்கிகளுக்கு, PAYTM, JIOMONEY போன்ற நிறுவனங்களுக்கு உதவி செய்வது மற்றும் மின்னணு வர்த்தகத்தின் மூலம் அந்நிய நேரடி முதலீட்டை சில்லறை வணிகத்தில் ஊக்குவிப்பதுமான மோடி அரசாங்கத்தின் திட்டம் என்பதை தவிர வேறு எதுவுமில்லை. சாதாரண மக்களின் பணத்தை வங்கிகளில் குவித்து பெரு முதலாளிகளுக்கு வாரி வழங்குவது அரசின் நோக்கம் என்பது மிகத் தெளிவானது.

இந்த பண மதிப்பின்மை என்பது பல மாநிலங்களுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும். சில மாநிலங்கள் தங்களின் ஊழியர்களுக்கு சம்பளத்தையும், தொழிலாளர்களுக்கு ஊதியத்தையும் வழங்க கடுமையாக போராடி வருகின்றன. பல மாநிலங்களில் வரி வருவாய் கடுமையாக குறைந்துள்ளதால், அது இந்திய பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நமது ஊழியர்களால் நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்கள் உட்பட கூட்டுறவுத்துறையை இந்த பணமதிப்பின்மை பாதிப்பிற்கு உள்ளாக்கி உள்ளது. ஒரு வாரத்திற்கு 24,000 ரூபாய் என்ற உச்சவரம்பு இருப்பதால் கல்விக்கடன், அவசர காலக்கடன், மருத்துவக் கடன் உள்ளிட்ட உடனடி தேவைகளுக்கான கடன்களைக் கூட கொடுக்க முடிவதில்லை. இந்த பண மதிப்பின்மை என்பது கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை பெருநிறுவனங்களுக்கு உதவிடும் புதிய தலைமுறை வங்கிகளுக்கு திசை திருப்பி கூட்டுறவு துறையை சீரழிப்பதற்கான ஒரு திட்டமிட்ட செயல்பாடு.

31.12.2016 முதல் 03.01.2017 வரை சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாடு பண மதிப்பின்மையை கடுமையாக எதிர்ப்பதோடு, சாதாரண மக்களின் துன்பங்களை நிவர்த்தி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது. இந்த மாநாடு விவசாயிகளின் கடன்களை தள்ளுபதி செய்யவும், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வரிச்சலுகை அளிக்கவும், மக்களின் கணக்கில் இருந்து பணத்தை பெறுவதற்கும், போடுவதற்கும் உள்ள வரையறைகளை நீக்க வேண்டும் மற்றும் கூட்டுறவு துறையின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை திரும்பப் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறது. மின்னணு பரிவர்த்தனைக்கான கட்டணங்கள், பொது விநியோகத்திற்கு ஆதார் அட்டை கட்டாயம் ஆகியவற்றை அரசாங்கம் நீக்க வேண்டும் என்றும் இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது. சாதாரண மனிதனுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களை உடனடியாக நீஇக்க வேண்டும். பணமதிப்பின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நியாயமான உரிமைகளுக்காக இதர தொழிற்சங்கங்களோடு கை கோர்த்து போராட இந்த மாநாடு தீர்மானிக்கிறது.